திட்டங்கள் – அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2009–2010ம் ஆண்டில் செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 63** **நாள்:16.7.2009.**

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.88, ஊ.வ.(ம)ஊ.துறை, நாள் 5.6.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.18175/09/AGAMT-1, நாள் 30.6.2009.
3. அரசு (ஆணை) நிலை எண்.57, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 10.7.2009.

------

**ஆணை:**

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எனும் உன்னத திட்டத்தை அரசு 2006 முதல் செயல்படுத்தி வருகிறது. ஊராட்சிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகள் ஒவ்வொரு வருடமும் தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசையின் அடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யயப்பட்டு மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர வகை செய்யப்பட்டது.

2) 2009–2010ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை 2511 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்த ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வீதம் மொத்தம் ரூ.502.20 கோடி தேவைப்படுகிறது. மொத்த ஒதுக்கீட்டில் ஒரு விழுக்காடு தொகையான ரூ.5.022 கோடி, இத்திட்டத்திற்கான தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுகிறது. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2009–10 ஆண்டிற்கு ரூ.457.61 கோடி வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதி தேவைப்படும் ரூ.49.612 கோடி தொகை, மாநில நிதிக்குழு ஆணைய நிதியின் ஊராட்சிகளின் பங்குத்தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும். 2009–10ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட விரிவான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை அனுப்பி அதற்கு ஒப்புதளித்து ஆணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசை கோரியுள்ளார்.

த.பிபா/–

3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து அவற்றை ஏற்று செயல்படுத்தலாம் என முடிவு செய்து, பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) 2009–10ம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தேவைப்படும் மீதித் தொகையான ரூ.49.612 கோடி (ரூ.507.222 கோடி–ரூ.457.61 கோடி = ரூ.49.612 கோடி) மாநில நிதிக் குழு ஆணைய நிதியின் ஊராட்சிகளின் பங்குத் தொகையிலிருந்து அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

(ii) 2009–2010ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

4) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.1862/FS/P/09, நாள் 11.7.2009–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>அரசாணை(நிலை)எண்.63,ஊ.வ.(ம)ஊ.(மா.அ.தி1)துறை, நாள் 16.7.2009.</u>

**<u>இணைப்பு</u>**

**<u>அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வழிகாட்டு நெறிமுறைகள் 2009–10</u>**

தமிழக அரசு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (அ.கி.அ.ம.தி) எனும் ஒரு திருப்புமுனை திட்டத்தை 2006–07–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளுக்கு போதிய வருவாய் ஆதாரங்களை ஒருங்கிணைப்பதும், உள்கட்டமைப்பு வசதிகளை ஐந்து வருட காலத்திற்குள் மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், மிகவும் குறைந்த வருவாய் உள்ள கிராம ஊராட்சிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தனி நபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதனடிப்படையில், ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு வட்டாரத்திலும், ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தி, அதனடிப்படையில் ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 2006–07–ஆம் ஆண்டு முதல் ஐந்து வருட காலத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. கணக்கீடு செய்யப்பட்ட தனி நபர் வருவாய் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு மாவட்டம்/வட்டாரத்திற்குமான, இத்திட்டம் 2009–10–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் கிராம ஊராட்சிகளின் பட்டியல் மாவட்டங்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் மாற்றுவதற்குரியதல்ல, மேலும் இப்பட்டியலினை எந்த சூழ்நிலையிலும் மாற்றுதல் கூடாது. ஒவ்வொரு கிராம ஊராட்சியும் அரசின் நேரடி உதவியாக ரூ.20 லட்சம் கிடைக்கப்பெறும். இதில் ரூ.15 லட்சம் வரையறுக்கப்பட்ட இனங்களுக்கானது, மற்றும் ரூ.5 லட்சம் வரையறுக்கப்படாத இனங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட இனங்களில் செலவின வரம்புகள் அரசாணை நிலை எண். 97, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நாள் 13.6.2007ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தொடர்புடைய தலைப்புகளின் வரம்புகள் மீண்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வரம்புகள், வரையறுக்கப்படாத நிதித் தொகுப்பில் ஒரு பகுதி ஒதுக்கீடு பெற்று அதிகரிக்கலாம். உதாரணமாக, பள்ளி விளையாட்டு மையத்திற்கான வரம்பு ரூ.1.5 லட்சம். எனினும் பள்ளி விளையாட்டு மையத்தை மேம்படுத்த ரூ.2 லட்சம் தேவையெனில் ரூ.50,000/–ஐ வரையறுக்கப்படாத நிதித் தொகுப்பான ரூ.5 லட்சத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

**3. <u>இத்திட்டத்தில் பணிகளைத் தேர்வு செய்யவும், பணிகள் மேற்கொள்ளவேண்டிய இடங்களை இறுதி செய்யவும் குழு அமைத்தல்.</u>**

தேர்வு செய்யப்பட்ட அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகள் ஒவ்வொன்றிலும் கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவேண்டியப் பணிகளைத் தேர்வு செய்யவும், பணிகளுக்கான இடங்களை இறுதி செய்யவும் இக்குழுவின் பொறுப்பாக்கப்படும்.

1) தொடர்புடைய கிராம ஊராட்சித் தலைவர்
2) வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி)
3) சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் (ஊ.வ.)/ ஒன்றியப் பொறியாளர்
4) சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்

- ❖ கிராம ஊராட்சித் தலைவர் அந்த கிராமத்தைப் பற்றிய விவரம் அறிந்தவர் என்பதால், வேலைகளைத் தேர்வு செய்வதிலும், வேலைக்கான இடங்களை இறுதி செய்வதிலும் அவருடைய கருத்துக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்.
- ❖ வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) நிர்வாக அனுமதி கோரி அனுப்பப்படும் கருத்துருக்கள் அனைத்தும் இத்திட்ட வழிகாட்டும் நெறிமுறைகளின்படிதான் அமைந்துள்ளன என்பதை உறுதி செய்யவேண்டும்.
- ❖ உதவிப்பொறியாளர் (ஊ.வ.) / ஒன்றியப் பொறியாளர் தொழில் நுட்ப வரையறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளன என்பதையும், முன்மொழியப்படும் பணிகளுக்கான மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், உறுதி செய்தல் வேண்டும்.
- ❖ கிராம நிர்வாக அலுவலர் மேலே முன்மொழியப்படும் பணிகளுக்கான இடத்தை வருவாய்த் துறை ஆவணங்களின் அடிப்படையில் தேர்வு செய்வதில் உதவி செய்ய வேண்டும்.

இக்குழு குறைந்தது ஒரு நாள் முழுவதும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்தினை பார்வையிட வேண்டும். இத்திட்டத்தில் பணிகள் தேர்வு மிக முக்கியமானதால் இக்குழு மேலெழுந்தவாரியாக ஆய்வு மேற்கொள்ளாமல், அக்கிராமத்தில் உள்ள அனைத்துக் குடியிருப்புகளையும் பார்வையிடவேண்டும். மேலும், கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள், சுய உதவிக் குழுக்கள் உட்பட பிற மக்களையும் சந்தித்து கிராம மேம்பாட்டிற்கானத் தேவைகளை கவனித்து, பணி நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்துப் பணியிடங்களையும் பார்வையிட வேண்டும். உதவிப் பொறியாளர் (ஊ.வ.)/ஒன்றியப் பொறியாளர் தேர்ந்தெடுக்கப்பட்டப் பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்க உரிய அளவீடுகளை எடுக்க வேண்டும். இவ்வாறு தேர்வு செய்யப்பட்டப் பணிகள் இதற்கெனக் கூட்டப்படும் சிறப்பு கிராம சபையினரால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும். நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்படும் கருத்துருக்களில் கிராம ஊராட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி), உதவிப் பொறியாளர்(ஊ.வ.) / ஒன்றியப் பொறியாளர் ஆகியோர் கையொப்பமிட வேண்டும். இத்திட்டத்தின் கீழ், நிர்வாக அனுமதி கோரும் கருத்துரு ஒவ்வொன்றுடனும் (1) கிராம சபாவின் சிறப்புக் கூட்டத் தீர்மானம், (2) ஊராட்சியின் கிராமங்கள் மற்றும் அதில் தேர்வு செய்யப்பட்டுள்ள பல்வேறு பணிகளின் விவரங்களுடனான வரைபடம் (ஊராட்சி அலுவலக இருப்பிட விவரத்துடன்) குறிப்பிடப்பட்டு, வரைபடம் ஒன்றும் அனுப்பப்பட வேண்டும். மேலும் இந்த வரைபடத்தில் கிராம ஊராட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி),

உதவிப் பொறியாளர்(ஊ.வ.) / ஒன்றியப் பொறியாளர் ஆகியோர் கூட்டாக ஒப்பமிடவேண்டும். கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் கிராம சபாவை ஒதுக்கிவிட்டு, அலுவலர்களால் கருத்துருக்கள் தயார் செய்யப்படாமல் இருப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர்களும் உறுதி செய்ய வேண்டும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் இரண்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அ) கட்டாயப் பணிகள்

ஆ) விருப்பப் பணிகள்

<u>**பணிகளைத் தேர்வு செய்ய வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் கீழ்க்கண்டவாறு:-**</u>

அ) **கட்டாயப் பணிகள்-** இந்த தலைப்பின் கீழ் ஐந்து வகையான பணிகள் அடங்கியுள்ளது.

(அ–1) **கிராமத்திற்கு ஒரு குளம் / ஊரணி/குட்டை:-**

ரூ.3 லட்சம் முதல் ரூ.5 லட்சம் செலவில் வரையறுக்கப்பட்ட நிதி பிரிவிலிருந்து இப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். பகுதிப் பகுதிப் பணியாக இல்லாமல் முழுமையானப் பணியாக இருத்திடல் வேண்டும் என்பதை உறுதி செய்யவே குறைந்தபட்ச தொகையாக ரூ.3 லட்சம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. முழுமையான பணி என்பது வரத்து வாய்க்கால், வடிகால் வாய்க்கால், தூர் வாருதல், குளியலுக்கான படித்துறை மற்றும் தடுப்புச் சுவர் போன்ற பணிகளின் தொகுப்பாக இருத்திடல் வேண்டும். பணிகளைத் தேர்வு செய்யவும், அதனை செய்து முடிக்கவும் கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(அ) **குளம் தேர்வு செய்தல்:-** கிராமத்திலுள்ள மக்கள் பெரும்பான்மையாக பயன்படுத்தும் குளம் / ஊரணிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். தனியாருக்கு சொந்தமான குளம் / ஊரணியைத் தேர்வு செய்யக் கூடாது. கிராமத்திற்கு தொலைவில் மற்றும் அருகில் உள்ள குளங்களுக்கு சம தகுதிகள் இருப்பின் கிராமங்களிலிருந்து தொலைவில் உள்ள குளங்களைத் தவிர்த்து, கிராமத்திற்குள் உள்ள குளத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(ஆ) **புதிய குளம்/கோவில் குளங்கள் / சிறுபாசனக் குளம் வேலைகள் எடுத்தல்:-** சில கிராம ஊராட்சிகளில் குட்டை/ஊரணி இருக்காது. அவ்வாறான இடங்களில் நிலம் இருப்பின், ஒரு புதிய குட்டை / ஊரணி அமைக்க பணி மேற்கொள்ளலாம். அதற்கு வாய்ப்பு இல்லையாயின், கோவில் குளங்கள்/ சிறுபாசனக் குளம் இருப்பின் அவற்றை எடுக்கலாம்.

(இ) **இயந்திரங்களைப் பயன்படுத்துதல்:-** மத்திய அரசால் நிறைவேற்றப்படும் இதர திட்டங்களைப் போல் அல்லாது, விரைந்து பணி முடிக்கவும், முழுமையாக செய்யவும், இயந்திரங்கள் பயன்படுத்துவது இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகிறது.

(ஈ) **வேலையின் வடிவமைப்பு:-** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இத்தகைய நீர்நிலைப் பணிகள் குறிப்பிடும்படியான வடிவமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். தூர் முழுமையாக அகற்றப்படும் வரை குளங்கள் ஆழப்படுத்துதல் நடைபெற வேண்டும். குளத்தில் / ஊரணியில் கணிசமான அளவு நீர் தேங்குவதை உறுதிப்படுத்த குறைந்தபட்சம்

ஏற்கெனவே உள்ள ஆழத்தைவிட 2 மீட்டர் ஆழப்படுத்தி, தண்ணீர் தேங்குவதை உறுதி செய்ய வேண்டும். இதற்கு மேலும் ஆழப்படுத்த வாய்ப்பு இருப்பின், குளம் அமையவிருக்கும் இடத்தைப் பொறுத்து பணி மேற்கொள்ளலாம். மழைக் காலங்களில் கரை அரிக்கப்படாமல் இருக்கவும், அகற்றப்பட்ட மண் குளத்தில் மீண்டும் சேராமல் இருக்கவும் குளத்திலிருந்து அகற்றப்பட்ட மண் குளக்கரையின் வெளிப்பகுதியில் போடப்பட்டு, இறுக்கம் செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்படும் குட்டை மற்றும் ஊரணியில் நீளத்தில் பாதியளவு மற்றும் அகலத்தில் பாதியளவு குளங்களுக்குள் சிறுகுளங்கள் இத்திட்டத்தின் கீழ் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும். குளத்தின் அளவு மிகப் பெரியதாக இருப்பின் அங்குள்ள தேவையின் அடிப்படையில், அளவுகள் முடிவு செய்யப் படலாம். பிரதான குளத்தின் மட்டத்திற்குக் கீழ் குறைந்தது ஒரு மீட்டர் ஆழத்திற்கு சிறு குளம் தோண்டப்பட வேண்டும். குளத்தில் நீர் முழுமையாக இருக்கும்போது, அகற்றப்பட்ட மண் மீண்டும் உள்ளே போகாதவாறு சிறு குளத்தின் நான்கு பக்கங்களிலும் சிமெண்ட் பூச்சு இல்லாத முண்டுக்கல் அடுக்கு முறையில் (Rough Stone Dry Packing) தடுப்பு அமைக்கப்பட வேண்டும். சிறுபாசனக் குளங்களில் சிறு குளம் அமைக்கப்படத் தேவையில்லை.

குளங்களின் வரத்து வாய்க்கால் மற்றும் வடிகால்களில் தூர் எடுப்பதை, குளங்கள்/ ஊரணியில் தூர் எடுப்பதுடன் சேர்த்து மேற்கொள்ளலாம்.

(உ) **குளியல் படித் துறைகள்:-** குளத்தில் மக்கள் பரவலாகப் பயன்படுத்தும் பகுதியில் படித்துறைகள் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும். குளத்தில் நீர் குறைந்த காலத்திலும், படித்துறையில் படிகள் வரை நீர் இருக்கும் வண்ணம் சிறுகுளத்திலிருந்து படித்துறைக்கு வாய்க்கால் அமைக்கலாம்.

(ஊ) **தடுப்புச் சுவர்:-** நிதி வசதிக்குட்பட்டு குளத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பக்கங்களில் தடுப்புச் சுவர் அமைக்கப் படலாம். இவ்விதம் அமைக்கப்படும் தடுப்புச் சுவர்கள் முண்டுக்கல் வைத்துக் கட்டப்பட வேண்டும். தேவையான இடங்களில் சிமெண்ட் பூச்சு இல்லாத முண்டுக்கல் அடுக்கு முறையில் தடுப்புச் சுவர் அமைக்கலாம்.

(எ) **இதர வசதிகள்:-** குளம் அமைந்துள்ள இடத்தினைப் பொறுத்து இட வசதிக்கேற்ப குளத்துக் கரையில் விளக்கு மற்றும் சில கான்கிரீட் பெஞ்சுகள் அமைக்கலாம்.

**(அ–2) விளையாட்டு மையம்:-**

(**அ**) இதில் இரண்டு வகை விளையாட்டு மையங்கள் உள்ளன.

i) **பள்ளி விளையாட்டு மையங்கள்:-** இந்தப் பிரிவுக்காக வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டிய செலவின வரம்பு ரூ.1.5 லட்சமாகும். போதுமான இட வசதிகளுடன் கூடிய அரசு / அரசு மானியம் பெறும் உயர் நிலை / மேல்நிலை பள்ளிகளில் இப்பணியினை மேற்கொள்ள வேண்டும். இப்பணியினை தொடக்கப் பள்ளி / நடுநிலைப் பள்ளிகளில் மேற்கொள்ளத் தேவையில்லை. இப்பிரிவில் கீழ்க்கண்ட வசதிகள் (ஏற்கெனவே இல்லையெனில்) செய்து கொடுக்கப்பட வேண்டும்.

1) ஒரு கைப்பந்து (Volley Ball) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன்
2) ஒரு பூப்பந்து (Ball Badminton) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன்

3) ஒரு வலைப்பந்து (Tennicoit) மைதானம் பெண்களுக்கானது தேவையான அனைத்து உபகரணங்களுடன்

4) கால்பந்து (Foot Ball) மற்றும் ஹாக்கி (Hockey) கோல் கம்பங்கள் தேவையான சாதனங்கள் மற்றும் இதர உபகரணங்களுடன்

5) கிரிக்கெட் விளையாட்டுப் பொருட்கள், தரை விரிப்பு மற்றும் பயிற்சி வலை

6) கூடைப் பந்து (Basket Ball) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன் . தரைத் தளமே போதுமானது, கான்கிரீட் தரைத் தளம் அமைக்கத் தேவையில்லை.

7) நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற் குழி தேவையான உபகரணங்களுடன்

8) ஈட்டி எறிதல் (Javelin), வட்டு எறிதல் (Discuss), குண்டு எறிதல் (Shot Put)

9) மேலுந்து கம்பங்கள் (Pull up Bars), இணைக் கம்பங்கள் (Parallel Bars), கைப் பிடிக் குண்டுகள் (Dumb Bells), பெஞ்ச் பிரஸ் (Bench Press), பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள் (Multiple sets of weight)

10) டேபிள் டென்னிஸ் மேஜை மற்றும் தேவையான இதர உபகரணங்களுடன்

11) சதுரங்கப் பலகை (Chess Board) மற்றும் கேரம் பலகை (Carrom Board) (4 Sets each)

**ii) சமுதாய விளையாட்டு மையங்கள்:–** கிராம ஊராட்சியில் அரசு / அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் இல்லையெனில் பொருத்தமான பொது இடத்தில் /நிலத்தில் சமுதாய விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்காக, வரையறுக்கப்பட்ட செலவினம் ரூபாய் ஒரு லட்சமாகும். இப்பிரிவில் கீழ்க்கண்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

1) ஒரு கைப்பந்து (Volley Ball) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன்

2) ஒரு பூப்பந்து (Ball Badminton) மைதானம் தேவையான அனைத்து உபகரணங்களுடன்

3) ஒரு வலைப்பந்து (Tennicoit) மைதானம் பெண்களுக்கானது தேவையான அனைத்து உபகரணங்களுடன்

4) ) நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதலுக்கான மணற் குழி தேவையான உபகரணங்களுடன்

5) மேலுந்து கம்பங்கள் (Pull up Bars), இணைக் கம்பங்கள் (Parallel Bars), கைப் பிடிக் குண்டுகள் (Dumb Bells), பெஞ்ச் பிரஸ் (Bench Press), பலகை மற்றும் பளு தூக்கும் கருவிகள் (Multiple sets of weight)

6) சதுரங்கப் பலகை (Chess Board) மற்றும் கேரம் பலகை (Carrom Board) (4 Sets each)

7) சிறுவர் / சிறுமிகளுக்கான ஏற்ற இறக்க பலகை (See-Saw) சறுக்கு (Slides) மற்றும் ஊஞ்சல் (Swings) (2 Sets each per village)

**(ஆ) இடத் தேவை:-**

விளையாட்டு மையங்கள் அமைப்பதில் இடத்தேர்வு முக்கிய காரணியாகும். இடமே இல்லையென்றாலும், போதுமான இடம் இல்லையென்றாலும், இந்தப் பணிக்காக இனாமாக நிலம் வழங்க கிராம சமுதாயத்தைக் கேட்டுக் கொள்ளலாம்.

**(இ) இட அமைப்புக்கான வரைபடம்:—**

இட அமைப்புக்கு ஏற்றவாறு ஒவ்வொரு விளையாட்டு மையத்திற்கும் ஒரு வரைபடம் தயார் செய்யப்பட வேண்டும். விளையாட்டுக் கருவிகள் ஏதும் ஒழுங்கற்ற முறையில் நிறுவப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். ஈட்டி எறிதல், வட்டு எறிதல், குண்டு எறிதல் ஆகியவற்றில் ஏவப்படும் கருவிகள் மற்ற விளையாட்டு விளையாடுபவர்களைத் தாக்காமல் இருக்குமாறு அவ்விளையாட்டுக்களுக்கான பயிற்சிக் களம் மைதானத்தில் ஒரு முனையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலுந்துக் கம்பங்கள், இணைக் கம்பங்கள், ஏற்ற இறக்கப் பலகை, சறுக்கு மரம் மற்றும் ஊஞ்சல் இவை, பூப்பந்து மற்றும் கைப்பந்து விளையாடுபவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில் இவ்விளையாட்டுக்களுக்கான ஆடுகளத்தை ஒட்டி அமைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தவாறு அமைக்க வேண்டும். கூடுதலாக, அமைக்கப்படும் ஒவ்வொரு விளையாட்டு மையமும், அனைத்து விளையாட்டு வீரர்களும் முழுமையாக பயன்படுத்தும் வகையில் இருக்க வேண்டும். கூடுமான வரை, விளையாட்டு மையங்கள் வடக்கு – தெற்கு முகமாக, விளையாடுபவர்களை சூரிய ஒளி நேரடியாகத் தாக்காத வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

**(ஈ) விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல்:-**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்வது குறித்து ஒரு மாதிரி ஒப்பந்தப்புள்ளி (Model Bid Document) ஆவணம் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்கக ஆணையர் அவர்களால் அனுப்பி வைக்கப்படும்.

**(உ) விளையாட்டு சாதனங்கள் பழுது நீக்கம் மற்றும் மாற்று விளையாட்டு சாதனங்கள் நிறுவுதல்:-**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மையங்களுக்கு ஊராட்சிப் பொது நிதிக் கணக்கிலிருந்து ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம்)—க்கு மிகாமல் விளையாட்டு சாதனங்களை பழுது நீக்கவும் மற்றும் மாற்றுச் சாதனங்கள் அதாவது, பந்து, மட்டை மற்றும் வலை ஆகியன கொள்முதல் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் பள்ளி மற்றும் சமுதாய விளையாட்டு மையம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும்.

**(ஊ) விளம்பரப் பலகை:-**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விளையாட்டு மையம் குறித்த விளம்பரப் பலகை சம்பந்தப்பட்ட இடத்தில் வைக்கப்பட வேண்டும். அதில் விளையாட்டு மையத்தின் மொத்த மதிப்பு,

விளையாட்டு மையத்தில் உள்ள விளையாட்டுக்களின் விவரம் மற்றும் விளையாட்டு மையம் பராமரிப்பிற்காக ஊராட்சியில் ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– உள்ளதென்ற விவரங்கள் இடம் பெற வேண்டும்.

(அ–3) **நூலகங்கள்:-** நூலகங்கள் அமைப்பதற்கான இடம் கிடைப்பது முக்கிய காரணியாகும். இடமே இல்லையென்றாலும், போதுமான இடம் இல்லையென்றாலும் இந்தப் பணிக்காக இனாமாக நிலம் வழங்க கிராம சமுதாயத்தைக் கேட்டுக் கொள்ளலாம்.

கிராம ஊராட்சி நூலகங்கள் / படிப்பகங்கள் திறந்து பராமரித்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் **243 ஜி,** பிரிவு **XI** மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 112–இல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஊராட்சியில் நூலகங்கள் இயங்குவது கிராம ஊராட்சியின் கடமையாகிறது. ஊராட்சியில் இதரத் துறைகள் அல்லது உள்ளூர் நூலக ஆணைக் குழுவால் செயல்படுத்தப்படும் நூலகங்கள் ஏதேனும் இருந்தாலும், செயல்பாட்டில் நூலகம் ஒன்று நடத்தப்படுவது தனித் தன்மையான கடமையாகிறது. நூலக ஆணைக் குழுவால் செயல்படுத்தப்படும் நூலகங்களுக்கு வழங்கப்படும் தளவாடச் சாமான்கள் மற்றும் புத்தகங்களை கிராம ஊராட்சித் தலைவர் எடுத்துக் கொள்ள இயலாது. எனவே, கிராம ஊராட்சியின் கட்டுப்பாட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகம் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் அமைத்திட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பிரிவில் உள்ள பணிகளை செய்து முடிக்க கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(அ) **கட்டிடம் :–**

முதல் கட்டமாக (First Option), நிலையான மாதிரி வடிவமைப்புடன் கூடிய ஒரு புதிய நூலகக் கட்டிடம் (400 சதுர அடி பரப்பளவிற்கு குறையாமல்) குறிப்பாக கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு அருகிலேயே அமைத்திட முயல வேண்டும். இந்தப் புதியக் கட்டிடத்தில் அலமாரிகள் (Bookshelves) மற்றும் பரண்கள் (Lofts) கூடுமானவரையில் கட்டிட சுவர்களிலேயே அமைத்திட வேண்டும்.

புதிய நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு நிலம் கிடைக்கப் பெறாமல் இருந்து, கிராம ஊராட்சி அலுவலகத்திற்கு அருகிலேயே 400 சதுர அடி பரப்பளவு உள்ள பொது கட்டிடம் இருந்தால் மட்டுமே அக்கட்டிடத்தில் நூலகம் அமைக்க இரண்டாவது வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நூலகத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டிடங்களில் சில பழுதுகள் சரிசெய்யப்படவேண்டி இருக்கலாம். நூலகக் கட்டிடம் மழைநீரில் ஒழுகாமல் இருப்பது அவசியமாகும். ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் கூரை கட்டிடங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு அனைத்து அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நூலகங்களாக மாற்றப்பட்ட பொதுக் கட்டிடங்களின், மேற்கூரையில் தளமும், தட்டோடுகளும் வேயப்பட்டு, மழைக் காலத்தில் மழைநீர் ஒழுகாதவாறும், அதனால் புத்தகங்களுக்கு சேதம் எற்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு நூலகங்களுக்குத் தட்டோடு அமைக்கவும், இன்னும் பிற பழுது நீக்கம் செய்யவும் நிதி ஒதுக்கீடு

செய்யப்பட வேண்டும். மேலும், மழைநீர் ஊடுருவுதலைத் தடுத்திடும் வகையில் வலை ஜன்னலுக்கு பதில் மூடிடும் ஜன்னல் அமைத்திட வேண்டும்.

**(ஆ) தளவாடச் சாமான்கள்:-**

மாதிரி வடிவினை (Type design) பின்பற்றி கட்டப்படும் நூலகங்களில் உள்ள தளவாடச் சாமான்கள், செவ்வக வடிவிலான மேஜை மற்றும் பிவிசியிலான பிளாஸ்டிக் நாற்காலிகள் நூலகத்திற்கு வரும் பொது மக்கள் உபயோகத்திற்கு பயன்படும் வகையில் வைக்கப்பட வேண்டும். புத்தங்கள் வைக்க இருபுறமும் திறப்பு உள்ள தள்ளுக் கதவுகள் / கண்ணாடிக் கதவுகள் இல்லாத புத்தக அலமாரிகள் வாங்கி வைக்கப்பட வேண்டும். மேஜை புத்தக அலமாரிகளின் பரிமாணம் (நீள, அகலம் (ம) உயரம் போன்றவை) ஆகியவை ஒவ்வொரு நூலகக் கட்டிடத்தின் இட வசதிக்கேற்ப கவனமாக முடிவு செய்யப்பட வேண்டும். இயன்ற வரையில் தற்போதுள்ள மரச் சாமான்களை / தளவாடச் சாமான்களை பயன்படுத்தலாம். மேலும், தளவாடச் சாமான்களை நன்கொடை மூலம் பெறுவதற்கு பொது மக்களிடமிருந்து பங்களிப்பை கோரிப் பெறலாம். தளவாடச் சாமான்களின் மதிப்பு வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.50,000/–க்கு மேல் இருக்கக் கூடாது.

தளவாடச் சாமான்கள் வாங்கும்போது, தேர்வு செய்யப்பட்ட நூலகக் கட்டிடங்கள் அனைத்தும் ஒரே அளவிலான இட அமைப்பு கொண்டதாக இருப்பதில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். பொதுமக்கள் வந்து செல்ல ஏதுவாக, நடமாட்டத்திற்கு போதிய இட வசதியுடன் தளவாடச் சாமான்கள் அமைக்க வேண்டும்.

**(இ) புத்தகங்கள்:-**

1. **நூலகங்களுக்கான புத்தகங்கள் வாங்குதல்:-**

2008–09 மற்றும் 2009–10 ஆண்டிற்கான நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் அரசாணை நிலை எண்.23, நாள் 19.3.2009ன்படி திருத்தியமைக்கப்பட்டுள்ள மாநில அளவில் இத்துறையில் அனுபவம் வாய்ந்த நபர்கள் அடங்கிய குழுவால் தேர்வு செய்யப்படும். குறைந்தபட்சம் ரூ.50,000/–ற்கான புதிய புத்தகங்கள் இந்நூலகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும்.

2. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்கு வாசகர்களுக்குப் பயன்படும் விதத்தில் உள்ள நல்ல பயனுள்ள ஏற்கெனவே பயன்படுத்திய புத்தகங்கள் / புத்தகங்களை நன்கொடையாகப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஊக்குவிக்க வேண்டும். பாடப் புத்தகங்கள் மற்றும் கையேடுகள் நன்கொடையாகப் பெறுவதைத் தவிர்த்திடல் வேண்டும்.

3. **இதழ்கள் (Magazines) :–** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நிதியினை புத்தகங்கள் வாங்குவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதழ்கள் மற்றும் செய்தித் தாள்கள் வாங்குதல் கூடாது. எனினும், இத்திட்ட நூலகங்களுக்கான செய்தித் தாள்கள் மற்றும் இதழ்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் வரையிலான சந்தாவினை பெரிய தொழில் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள், ரோட்டரி / லயன்ஸ் போன்ற நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்கொடையாக பெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோர் உறுதி செய்தல் வேண்டும்.

**4.** தற்போது இயங்கி வரும் அய்யன் திருவள்ளுவர் நூலகம், முறைசாரா கல்வி, கிராம அளவிலான நூலகங்கள் மற்றும் இதுபோன்ற நூலகங்களில் உள்ள புத்தகங்கள், செய்தித் தாள்கள் மற்றும் வாராந்தரிகள் ஆகியவைகளை ஒருங்கு சேர்த்து இந்த நூலகங்களில் இடம்பெறச் செய்யலாம்.

**5.** நூலகக் கட்டிடத்திற்குள் உலக வரைபடம், இந்திய வரைபடம், தமிழ்நாடு மற்றும் மாவட்ட வரைபடங்கள் அனைவரும் பார்க்கும் வகையில் (Prominently) இடம் பெறச் செய்ய வேண்டும். நூலகத்தின் சுவர்களில் கற்றல் அல்லது கற்பித்தல் தொடர்பான திருக்குறள் போன்ற ஒரு மேற்கோள் எழுதப்படுதல் வேண்டும்.

(ஈ) **மதிப்பூதிய நூலகர் நியமனம்:-**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்கள் மதிப்பூதிய நூலகர்களால் நிறுவகிக்கப்பட வேண்டும். மதிப்பூதிய நூலகர்கள் முதலில் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.750/– மதிப்பூதியமாக சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியின் பொது நிதிக் கணக்கிலிருந்து வழங்கப்பட வேண்டும். நூலகக் கட்டிடப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு தளவாடச் சாமான்கள் மற்றும் புத்தகங்கள் வாங்கப்பட்ட பின்னரே, மதிப்பூதிய நூலகர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்கு மதிப்பூதிய நூலகர்கள் நியமனம் செய்வது சம்பந்தமான வழிகாட்டு நெறிமுறைகள் (அரசாணை (நிலை) எண்.177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நாள் **25.10.2007ல்**) வெளியிடப்பட்டுள்ளது.

**(அ–4)** சுடுகாடு / இடுகாடு :-

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் இடுகாடு / சுடுகாடுகள் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(அ) **அணுகு சாலைகள் –** இடுகாட்டின் நுழைவு வாயிலிலிருந்து சுமார் **50** மீட்டர் நீளம் வரை சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க வேண்டும். சுடுகாடாக இருக்குமானால், தகன மேடையிலிருந்து **50** மீட்டர் நீளத்திற்கு அல்லது இடத்தின் தன்மைக்கேற்ப / தேவையின் அடிப்படையில் இந்த அணுகு சாலை அமைக்கப்பட வேண்டும்.

(ஆ) **சுற்றுச் சுவர்–** இத்திட்டத்தில் மேற்படி சுடுகாடு / இடுகாட்டினை சுற்றி செங்கற்களைக் கொண்டு கதவுகள் இன்றி சுற்றுச் சுவர் கட்டும் பணியினை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளலாம். சுற்றுச் சுவரின் நீளம் மிகவும் அதிகமாக இருக்குமானால், பிரதான வாயில் அமைந்துள்ள பக்கத்தில் மட்டிலுமாவது மதிற்சுவர் கட்டும் பணி கட்டாயமாக எடுத்துச் செய்யப்பட வேண்டும். மற்றும் மூலைகளில் சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் உறுதியான அடிதளத்துடன் அமைக்கப்பட வேண்டும். மேலும், தூண்கள் (Pre cast cement concrete pillars) போதிய இடைவெளியுடன் மற்ற பகுதிகளில் இடுகாட்டினை சுற்றி

எல்லைக் கோடாக அமைத்திட வேண்டும். ஒருபோதும் முள்கம்பி/சங்கிலி இணைப்பு வேலி அமைத்தல் கூடாது.

**(இ) சுடுகாட்டுக் கொட்டகை–** இந்த சுடுகாட்டுக் கொட்டகை கீழ்க்கண்ட எடுத்துக்காட்டான அளவு மற்றும் பரிமாணங்களுடன் அமைக்கப்பட வேண்டும்.

- 12 அடி நீளம், 6 அடி அகலத்துடன், 2 அடி உயரமுள்ள மேடை அமைத்தல்.
- 4 தூண்களுடன், புகைபோக்கி வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கூரை அமைத்தல். தகரம்/கல்நார் தகடு போன்றவற்றால் கூரை அமைப்பது முற்றிலுமாக தடை செய்யப்படுகிறது.
- இந்த சுடுகாட்டு மேடையின் தரைப் பகுதி மணல் / மண் தளமாக / தீயினால் பாதிக்கப்படாத கற்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.
- இந்த எரி மேடையானது 4 அடி அகல சுற்று நடை பாதையுடன் அமைக்கப்பட வேண்டும்.

எரிக்கும் பழக்கம் இல்லாதிருக்கும் நிலையில் இதனை காத்திருப்புக் கொட்டகையாக மாற்றிக் கொள்ளலாம்.

**(ஈ) தண்ணீர் வசதி –** சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் கைப்பம்புகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். கிராமங்களில் அந்திம கிரியை காரியங்கள் நாளின் பிந்திய நேரத்தில், பெரும்பாலும் பொதுக் குழாய்களில் தண்ணீர் வராத நேரத்தில்தான் நடைபெறும். ஆதலால், இடுகாடு/சுடுகாட்டில் குழாய் நீட்டிப்பு செய்து குழாய் அமைத்தல் தவிர்க்கப்பட வேண்டும். கைம்பம்புக்கு பதிலாக, நீர் விநியோக, குழாய்ப் பாதை அமைப்பது வீணாண பணியாகும்.

**(உ) விளக்கு வசதி –** தேவையின் அடிப்படையில் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படலாம். சூரிய ஒளியில் அமைக்கப்படும் சோலார் விளக்குகள் கிராமங்களிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கும் மயானக் கொட்டகைகளில் ஏற்படுத்திப் பராமரிப்பது கடினமானது, மற்றும் திருடு போவதற்கு ஏதுவாக இருப்பதால் சோலார் விளக்குகள் இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் அமைத்தலை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வகைப்பாடுகளில் சுடுகாடு/இடுகாடு மேம்பாடு பிரசித்தி பெற்ற பணியாகும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்குள் கூடுதலான இடுகாடுகள் தேவைப்படின் அத்தகைய கூடுதலான இடுகாடு/சுடுகாடுகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட வரையறுக்கப்படாத நிதியிலிருந்து கிராம ஊராட்சியின் விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளலாம்.

அ–5) **குடிநீர் விநியோகம்:-**

இவ்வகை பணிக்கு வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து குறைந்தது ரூ.1 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும் தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யலாம். கீழ்கண்ட பணிகள் எடுத்துக் கொள்ளப்படலாம்:

(அ) ஆழ்துளை கிணறுகள் / மின்விசைப் பம்புகள் / சிறிய மின் விசைப் பம்புகள், மற்றும் பொதுக் குழாய்கள் – புதிதாக அமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் (Installation and replacement).

(ஆ) புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டுதல்

(இ) குடிநீர்குழாய் விஸ்தரிப்பு.

(ஈ) தற்போதுள்ள நீர் ஆதாரங்கள் மற்றும் நீர் விநியோகத்தினை மேம்படுத்தும் ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்தல்.

**ஆ. விருப்பப் பணிகள்:-**

இத்திட்டத் தின்கீழ் கீழ்க்காணும் விருப்பப் பணிகளை மேற்கொள்ளலாம்.

**ஆ–1) சிமெண்ட் கான்கிரீட் தளங்கள்** –

(அ) இந்தப் பணிக்கான வரையறுக்கப்பட்ட செலவின வரம்பு ரூ.3 லட்சம் ஆகும். அரசாணை (நிலை) எண்.74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.7.2006ன்படி கீழ்கண்ட வரையறையின் அடிப்படையில் சிமெண்ட் கான்கிரீட் தளங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| மக்கள் தொகை 500க்கும் குறைவாக உள்ள வசிப்பிடங்கள் | : | 250 மீட்டர் வரை |
| 501 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 750 மீட்டர் வரை |
| 1001 முதல் 3000 வரை மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 1500 மீட்டர் வரை |
| 3000க்கும் அதிகமாக மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 3000 மீட்டர் வரை |

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்குறித்த வரையறைகளைப் பின்பற்றி இக்குழு பணிகளை முன்மொழிய வேண்டும்.

**(ஆ) பணிகளைத் தேர்வு செய்ய வேண்டிய வழிமுறைகள்:-**

(அ) அமைக்கப்பட வேண்டிய தளங்களின் இருபுறங்களிலும் குடியிருப்புகள் இருக்குமானால் அவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(ஆ) தெருக்கள் அல்லது சந்துகள் தாழ்வான பகுதிகளில் அமைந்து மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குமானால் அவற்றிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(இ) சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களின் ஒரு பகுதி விடுபட்டு இருக்குமானால் அந்தப் பகுதியை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட வேண்டிய தெருக்களின் நடுவில் மின்வாரிய / தொலைபேசிக் கம்பங்கள் அமையப் பெற்றிருக்குமானால் அவற்றை தளம் அமைக்கும் பணி துவங்கு முன்னர் தெருவின் ஓரப் பகுதியில் மாற்றி அமைக்க வேண்டும்.

(உ) அவ்வப்போது பகுதி பகுதியாக (Piecemeal) பணிகள் மேற்கொள்வதைத் தவிர்த்திடல் வேண்டும்.

**(இ) சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைப்பதற்கு பின்பற்ற வேண்டிய வடிவமைப்பு வரையறைகள்:**

(அ) மழைநீர் வசிப்பிடங்களுக்குள் நுழையாதவாறு வீடுகளின் தள அமைப்பை கருத்தில் கொண்டு சிமெண்ட் கான்கீரிட் தளங்கள் அமைக்கப்பட வேண்டும்.

(ஆ) சிமெண்ட் கான்கீரிட் தளங்களின் இருபுறங்களிலும் செஞ்சரள் நிரப்பப்பட வேண்டும். இதன்மூலம் இருபுறங்களிலும் தண்ணீர் தேங்குவதை தடுக்கவும், கான்கீரிட் தளங்களின் ஒரங்கள் உடைபடுவதை தவிர்க்கவும் செய்யலாம். மேலும் இருசக்கர வாகனங்கள் மற்றும் நடைபாதை வாசிகள் தவறி விழுவதிலிருந்து தடுக்கலாம். மழை நீர் இருபுறமும் வழிந்தோடும் வகையில் தளத்தின் மையப்பகுதி ஓரளவுக்கு உயரமாக (camber) அமைக்கப்படலாம்.

(இ) சிமெண்ட் கான்கீரிட் தளங்களின் குறுக்கே கால்வாய்களை அமைக்க வழிவகை செய்யலாம். இதன்மூலம் தளங்களின் இருபுறமும் நீர்தேங்குவதை தவிர்க்கலாம்.

(ஈ) தேவையான இடங்களில் குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் குழாய் போன்ற இணைப்புகளை ஏற்படுத்த வழிவகை செய்யலாம்.

(உ) சிமெண்ட் கான்கீரிட் தளங்கள் அமைக்கும்போது ஒவ்வொரு 5 மீட்டருக்கு அடுத்தும் தார் பகுதி மூலம் இணைப்பு (Bituminous Pad) ஏற்படுத்த வேண்டும்.

**ஆ–2) தெரு விளக்கு அமைத்தல்:-**

(அ) புதிய குடியிருப்புகள், ஏற்கனவே உள்ள குடியிருப்புகளின் விஸ்தரிப்பு பகுதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்பு மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு போன்ற பகுதிகளில் தேவையின் அடிப்படையில் இந்த பணிகளை மேற்கொள்ளலாம். தற்போது தெருவிளக்குகள் போதுமானதாக இல்லை எனக் கண்டறியப்பட்டால் கூடுதலான தெருவிளக்குகள் அமைக்கலாம்.

புதிய கம்பம் அமைக்க மின்வாரியத்தினால் ரூ.9,500/– என்ற ஒரே விலை விகிதம் 13.3.2007லிருந்து அமல்படுத்தப்பட்டுள்ளதால் இத்தகையப் பணிகள் ஒவ்வொன்றுக்கும் விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்படவேண்டிய அவசியமில்லை. இந்தப் பகுதியின் கீழ் பணிகளை தேர்வு செய்யும் போது கீழ்கண்ட வழிமுறைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(அ) முழுவதுமாக தெருவிளக்கு இல்லாத வசிப்பிடங்கள்/தெருக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(ஆ) தெருவிளக்குகள் இல்லாத வசிப்பிடங்கள்/தெருக்களில் அதிக எண்ணிக்கையில் வீடுகள் இருக்குமானால் அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(இ) ஒரு குழல் விளக்கு அல்லது சிறிய ஒளிர் விளக்கு (Compact fluroscent lamp) அமைக்கப்பட வேண்டும்.

(ஈ) தேவையின் அடிப்படையில் இடுகாட்டு பாதைகள், குளங்கள் மக்கள் பயன்படுத்தும் கிராமப்புறங்கள் கிராம சந்தைகளுக்கு செல்லும் சாலைகள் மற்றும் சமுதாய உள்கட்டமைப்பு வசதிகளுக்கான சாலைகளில் தெருவிளக்கினை நீட்டிப்பு செய்யலாம். இதைபோலவே மீனவர் குடியிருப்புகளில் கடற்கரைக்கு செல்லும் முக்கிய சாலைகளில் தெருவிளக்கினை நீட்டிப்பு செய்யலாம்.

**(ஆ) சோடியம் ஆவி விளக்கு அமைத்தல்**

அரசாணை நிலை எண். 74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 11.7.2006ன்படி கீழ்கண்ட வரையறைகளை பின்பற்றி சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| 500க்கும் குறைவாக மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 2 சோடியம் ஆவி விளக்குகள் வரை |
| 501 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 4 சோடியம் ஆவி விளக்குகள் வரை |
| 1001க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள வசிப்பிடங்கள் | : | 6 சோடியம் ஆவி விளக்குகள் வரை |

அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின்படி வசிப்பிடங்களில் அமைக்கப்பட வேண்டிய சோடியம் ஆவி விளக்குகளை தேர்வு குழு முன்மொழிய வேண்டும்.

வரையறுக்கப்பட்ட இந்த வரம்பிற்குட்பட்டு அதிக எண்ணிக்கையில் மக்கள் தொகை உள்ள இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இது இடத்திற்கு இடம் மாறுபடும். சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான பேரூந்து நிலையம், கிராம சந்தைகள், மீன் ஏலமிடும் இடம், நியாய விலைக்கடை, ஊராட்சி அலுவலகம், ஊரக விளையாட்டு மையம் மற்றும் இதர இனம்.

சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் பிளோரசண்ட் விளக்குகளுக்கு DGS & D விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. DGS & D அங்கீகரிக்கப்பட்ட விலையில், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் / அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து சோடியம் ஆவி விளக்குகள் (Sodium Vapour Lamps) பிளோரசண்ட் விளக்குகள் (Fluorsent Tube Lights) வாங்கிட வேண்டும்.

ஆ–3) **மீன்வளர்ப்பு குளங்கள்:** பொதுவாக இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்கப்பட வேண்டும். உதவி இயக்குநர் (மீன்வளம்) மற்றும் ஊராட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட கிராமத்தில் மீன் வளர்ப்புக் குளம் அமைத்திட வாய்ப்பு இல்லை என்று கூட்டாகச் சான்றளித்தால், அவ்வாறான நிகழ்வுகளில் மட்டும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலிருந்து இக்கூறுக்கு விலக்களிக்கப்படும். இந்தக் கூறில் ஒரு குளத்தை மேம்படுத்த **அதிகபட்ச வரம்பாக ரூ.25,000/–** நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை தேர்வு செய்து செயல்படுத்த கீழ்க்காணும் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(அ) **மீன்வளர்ப்புக்காக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் தேர்வு செய்தல் –** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள கிராமங்களில் தற்போது உள்ள அடிப்படை வசதிகள் குறித்து எடுக்கப்பட்ட அடிப்படை புள்ளி விவரங்களின்படி தகுதிவாய்ந்த சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள் மீன்வளர்ப்பிற்காக தேர்வு செய்யப்பட வேண்டும். இயன்றவரை இத்திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்திற்கு ஒரு குளம் என்ற பிரிவின் கீழ் மேம்படுத்தப்படும் குளத்தை/ஊரணியை தவிர்த்து பிற குளங்களை மீன் வளர்ப்புக்காக தேர்வு செய்யலாம்.

(ஆ) **மீன்குஞ்சுகள் விநியோகித்தல் –** மீன்வளர்ப்பதற்கான நல்ல தரம் வாய்ந்த மீன்குஞ்சுகளை மீன்வளத்துறையை கலந்தாலோசித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

(இ) **ஏரி/குளங்களில் மீன் வளர்க்கும் உரிமைகளை முடிவு செய்தல்** – மீன் பாசி உரிமையை கிராம ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக் குழுக்கள் இடையே கிராம ஊராட்சி முடிவு செய்யும். இந்த நோக்கத்திற்காக கிராம ஊராட்சிகளிலுள்ள சுய உதவிக் குழுக்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட முத்திரையிட்ட விலைப் புள்ளிகளை கோரிப் பெற வேண்டும். இதற்கென 15 நாட்களுக்கு குறையாமல் கால அவகாசம் அளிக்கும் அறிவிப்பை சுய உதவிக் குழுக்களுக்கு சார்பு செய்ய வேண்டும். மேலும் கிராம ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்பு பலகையிலும் வட்டார ஊராட்சியின் அலுவலக அறிவிப்பு பலகையிலும் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும். விலைப்புள்ளியை அளித்துள்ள சுய உதவிக் குழுக்களின் முன்னிலையில் கிராம ஊராட்சித் தலைவர் விலைப்புள்ளியை திறக்க வேண்டும். இதில் வெற்றி பெறும் சுய உதவிக் குழுவிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு கிராம ஊராட்சி மீன் பாசி உரிமையை ஒப்படைக்கப்பட வேண்டும்.

சுய உதவிக் குழுக்கள் ஏதும் மீன் பாசி உரிமையைக் கோருவதில் முன் வரவில்லையெனில், குறைந்தபட்சம் 15 நாட்கள் அவகாசம் தரும் அறிவிக்கையை கிராம ஊராட்சி அலுவலக அறிவிப்பு பலகையிலும், வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் அறிவிப்பு பலகையிலும் வெளியிட்டு இந்த மீன் பாசி உரிமையை பொது ஏலத்தில் விடலாம். வட்டார வளர்ச்சி அலுவலரால் (கிராம ஊராட்சி) நியமனம் செய்யப்படும் அலுவலரின் முன்னிலையில் ஊராட்சி அலுவலகத்தில்

வைத்து ஏலம் நடைபெற வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கான இந்த மீன்பாசி உரிமை கிராம ஊராட்சியில் முறையாக நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த இரு முறைகளிலும் விலைப்புள்ளிகளில் குறிப்பிடப்பட்ட ஏலத்தொகை திருப்திகரமாக இல்லையெனில் மறு விலைப்புள்ளி கோருதல்/மறு ஏலம் நடத்துதல் ஆகியவற்றை கிராம ஊராட்சி மேற்கொள்ளலாம்.

**ஆ–4) சந்தைகள்:-**

இது ஒரு விருப்பப் பணியாகும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் ஏற்கனவே வழக்கமாக சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து அதிக மக்கள் பங்கேற்கும் சந்தைகள் நடைபெற்று வருமானால் வழக்கமாக அமைக்கபடும் கடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கீழ்க்கண்ட பணிகளை எடுத்துச் செய்யலாம்.

(அ) சந்தைகூடும் இடங்களில் நிரந்தரமான மேடைகளை அமைத்தல்.

(ஆ) சந்தைகூடும் இடங்களில் அணுகு பாதைகள், குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி போன்றவற்றை அமைத்தல்.

(இ) மாட்டு வண்டி மற்றும் இதர வாகனங்களை நிறுத்த இடங்களை நிர்ணயம் செய்தல்

(ஈ) ஓடு பதிக்கப்பட்ட / கான்கிரீட் (ஆர்சிசி) கூரை மட்டுமே கிராம சந்தைகளுக்கு அமைக்கப்பட வேண்டும். கல்நார் கூரைகள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

**4. உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பராமரித்தல்.**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட ஊராட்சியால் பராமரிக்கப்பட வேண்டும்.

**5. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் தடை செய்யப்பட்டப் பணிகள்:**

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டப் பணிகள் தடை செய்யப்பட்டுள்ளது.

1. மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத் துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். விதி விலக்காக பொது விநியோகக் கட்டிடங்கள் இத்திட்டத்தின் வரையறுக்கப்படாத நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படலாம்.
2. அனைத்து வகையான பராமரிப்பு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.
3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுய நிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

5. தனி நபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.

7. மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்து இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. சரளை / கப்பி சாலைகள் ( தார் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்).

13. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

**6. இதர திட்டங்களை ஒருங்கிணைத்து கிராம வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்:** ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லாது பிற துறைகளால் பல வளர்ச்சித் திட்டங்கள் உதாரணமாக வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் , தரிசு நிலம் மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் வேளாண்துறை மூலமும், மேலும் தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை, பட்டு வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் ஊரகச் சாலைகள், பொதுப்பணித்துறை, சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை (மருத்துவ முகாம்கள்), தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை மற்றும் கல்வித்துறை ஆகிய துறைகளின் மூலமும் பல்வேறு திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் 2009–10–ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களின் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவரால் மாவட்ட அளவிலான பிற துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு அனுப்பப்படவில்லை எனில் உடனடியாக இப்பட்டியலை பிற துறை அலுவலர்களுக்கு அனுப்பிட வேண்டும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் இதர துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள் தங்களால் நிறைவேற்றப்படும் திட்டங்களை முறையாக ஒருங்கிணைத்து இந்த கிராமங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு கவனம் செலுத்த வேண்டும். நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்த பின் ஒரு கிராமத்திற்கு கிடைக்கக்கூடிய

உத்தேச நிதி ரூ.1 கோடியாக இருத்தல் வேண்டும். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு அடுப்பு, 2 ஏக்கர் நிலம் வழங்குதல் ஆகிய திட்டங்கள் இதில் சேர்க்கப்படுதல் கூடாது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பிற துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்த பின்னர் மேற்கொள்ள உத்தேசித்துள்ள பணிகளை இரண்டு புத்தகங்களாக, ஒன்று மாவட்டம் முழுவதிற்குமானதும் ஒவ்வொரு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமத்திற்கான மற்றொரு புத்தகமாகவும் தயார் செய்ய வேண்டும். மாவட்டத் தொகுப்பு புத்தகம், சம்பந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள அமைச்சர் மூலமாக பொது நிகழ்ச்சி ஒன்றில் வெளியிடப்பட வேண்டும். கிராம வாரியாகத் தயாரிக்கப்படும் புத்தகம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)க்கும் வழங்கப்பட வேண்டும்.

**7. மாவட்ட அளவிலான குழு:** அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்களில் மேலே உத்தேசித்துள்ளவாறு பல்வேறு திட்டங்கள் மற்றும் மாவட்ட அளவிலான பல்வேறு துறை நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், திட்டத்தின் முன்னேற்றத்தினை கண்காணிக்கவும் கீழ்க்கண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இந்த குழு மாதம் ஒருமுறை கூடும். அப்போது இத்திட்டம் நிறைவேற்றுவதில் ஏற்படும் முன்னேற்றத்தையும், இடையூறுகளையும் கவனத்தில் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்றும் அமைப்புகளுக்கு/ நிறுவனங்களுக்கு வழிநடத்தும் பணியை இக்குழு மேற்கொள்ளும். மேலும் இத்திட்டத்தை நிறைவேற்றும் ஒட்டுமொத்த பொறுப்பு மாவட்ட அளவில் இக்குழுவை சார்ந்தது.

மாவட்டக் குழு கீழ்க்கண்டவர்களை உள்ளடக்கியது.

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | .. தலைவர் |
| 2 | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | .. உறுப்பினர் செயலர் |
| 3 | திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | .. உறுப்பினர் |
| 4 | கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலை) | .. உறுப்பினர் |
| 5 | கோட்டப் பொறியாளர் (கிராமச் சாலைகள்) | .. உறுப்பினர் |
| 6 | கண்காணிப்பு பொறியாளர்/செயற் பொறியாளர் தமிழ்நாடு மின் வாரியம் | .. உறுப்பினர் |
| 7 | கண்காணிப்பு பொறியாளர்/செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | .. உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 8 | கண்காணிப்பு பொறியாளர்/செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (WRO Wing) | .. உறுப்பினர் |
| 9. | செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (Buildings Wing) | .. உறுப்பினர் |
| 10 | உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) | .. உறுப்பினர் |
| 11 | மாவட்ட விளையாட்டு அலுவலர் | .. உறுப்பினர் |
| 12 | மாவட்ட நூலக அலுவலர் | .. உறுப்பினர் |
| 13 | தலைமைக் கல்வி அலுவலர் | .. உறுப்பினர் |
| 14 | துணை இயக்குநர் (தோட்டக்கலை) | .. உறுப்பினர் |
| 15 | துணை இயக்குநர், மருத்துவத் துறை | .. உறுப்பினர் |
| 16 | இணை இயக்குநர்/துணை இயக்குநர் (கால்நடைதுறை) | .. உறுப்பினர் |
| 17 | இணை இயக்குநர்/ துணை இயக்குநர் (வேளாண்துறை) | .. உறுப்பினர் |

**8. நிதி வழுங்கல்:** இத்திட்டத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவரும், வட்டார வளர்ச்சி அலுவல(ஊராட்சி)ரும் தனித்தனியே வங்கிக் கணக்கு ஒன்றை பராமரிக்க வேண்டும். இத்திட்டத்திற்கான நூலகங்கள் மற்றும் விளையாட்டு பகுதிகளுக்கான தொகையை மாவட்ட அளவில் வைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சிய பகுதிகளுக்கான நிதியை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) க்கு விடுவித்திடல் வேண்டும். கிராம அளவில் தனியே வங்கிக் கணக்கு பராமரிக்கத் தேவையில்லை. மாவட்ட நிலையில் மாவட்ட ஆட்சியர் ஒரு கணக்கும் வட்டார நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) தனியே ஒரு கணக்கும் பராமரித்தல் போதுமானது. ஒரு கிராம ஊராட்சிக்கான நிதி மற்றொரு கிராம ஊராட்சிக்கான நிதியுடன் கலந்துவிடுவதைத் தடுக்க, ஒவ்வொரு ஊராட்சிக்குமான வரவு செவுகளைக் குறித்திட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்கள் ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனி பக்கம்/பக்கங்கள் ஒதுக்கி பேரேடு (Ledger) ஒன்று பராமரித்திட வேண்டும்.

**9. ஒப்பந்தப் புள்ளி நடைமுறை:-**

**பணி நிறைவேற்றும் முறை:** விளையாட்டு உபகரணங்கள், நூலகங்களுக்கான தளவாடச் சாமான்கள் மற்றும் புத்தகங்கள் தவிர இதர அனைத்துப் பணிகளுக்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஒப்பந்தப் புள்ளி கோரும் கோரும் அலுவலர் ஆவார். ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும்

அனுமதித்தல் தொடர்பாக அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, நாள் 20.12.2007ல் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நூலகங்களுக்கான தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்ய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் ஒப்பந்தப் புள்ளி கோரும் அலுவலர் ஆவார்.

அரசாணை (நிலை) எண்.186, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (மா.அதி–2) துறை, நாள் 16.11.2007ன்படி ரூ.5.00 லட்சம் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பணிகளுக்கு மூன்று முறை ஒப்பந்தப் புள்ளி கோரிய பிறகும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதிற்குறிப்பு பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ளமுடியாத அளவிற்கு ஒப்பந்தப் புள்ளி தொகை மிக அதிக அளவில் இருக்கும் இனங்களிலும், ஒப்பந்தப் புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும் அத்தகையப் பணிகளை கிராம ஊராட்சிகள் தாமே எடுத்துச் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படைக்க வேண்டும். ரூ.5.00 லட்சத்திற்கும் அதிகமாக உள்ள பணிகளைப் பொறுத்தவரை, மூன்று முறை ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதில் பெறப்படாத இனங்களிலும், ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு ஒப்பந்தப்புள்ளி மிக அதிக அளவில் உள்ள இனங்களிலும், ஒப்பந்தப்புள்ளி மூலம் அனுமதிக்கப்பட்ட பணிகள் இடையிலேயே கைவிடப்பட்ட இனங்களிலும் மேற்கண்ட பணிகளை கிராம ஊராட்சிகள் திறந்த நிலை ஒப்பந்தப்புள்ளி கோரி நிறைவேற்ற கிராம ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்க வேண்டும்.

**10. தகவல், கல்வி மற்றும் தொடர்பு:**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு ஆண்டின் ஒதுக்கீட்டில் ஒரு சதவீதம் தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையினை, வேலைகளை கண்காணிக்கும் தனியார் முகமைகளுக்கும் (Independent Agencies), மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்களுக்கும் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் அவர்களின் பங்கேற்பிற்காக நினைவு பரிசு வழங்குவதற்கும் உபயோகப்படுத்தலாம்.

**11. ஆவணப்படுத்துதல் :**

இத்திட்டத்தின் பல்வேறு நிலைகளை, பணி தேர்வு செய்வதிலிருந்து அவற்றை செய்து முடிக்கும்வரை உள்ள அனைத்து விவரங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆவணப்படுத்துதல் வேண்டும். பணிகள் தொடங்குவதற்கு முன்னரும், நடைபெறும்போதும் திட்டத்தால் ஏற்படும் பயன்களை காட்டும் தொடர்புடைய நிழற்படங்கள் மற்றும் ஒளி நாடாக்களை தயார் செய்வதும் இதில் அடங்கும். பயனாளிகளின் பார்வையில் இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட சமுதாய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட வெற்றி கதைகள் தயார் செய்யப்பட வேண்டும்.

**12.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையருடன் கலந்தாலோசித்து, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில், எதிர்காலத்தில்

ஏற்படும் சூழ்நிலை மாற்றங்களை கருத்தில் கொண்டு, தேவையான மாற்றங்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, அரசு முதன்மை செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**